அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுக-ளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நி-கழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

## 02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

### 2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்வுக்கு அத்தியாவசியமானது என கருதப்படும் அனைத்து தகவல்களும் மற்றும் தெளிவுடுத்தல்களும் எனக்கு கிடைக்கப்பெற்றதுடன், எனது பரிசோதனையின் பிரகாரம் உரிய நிதி அறிக்கைகள் ஆணைக்குழுவினால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகள் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

**2.2** பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.

| | சட்டங்கள், விதிகளுக்கான/ கட்டளைகளுக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச் சட்டம் | |
| (i) | 17(5) ஆம் பிரிவு | பரிசில்களை வென்றோர் உரித்துக் கோராத 06 மாத காலத்தை கடந்த பரிசில்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைக்கும் தொகையை முதலாவதாக நிதியத்திற்கும் அதன் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்க வேண்டிய போதிலும் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பரிசில்களாக வழங்குவதற்கு கொள்வனவு செய்த ரூபா.779,750 கூட்டு பெறுமதியுடைய மூன்று மோட்டார் துவிச்சக்கர வண்டிகள் விற்பனை செய்யப்பட்டு அந்த தொகை அதிகாரச் சட்டத்திற்கமைய ஈடுபடுத்த மீளாய்வாண்டின் மே 30 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணிகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| II. | 19(1) மற்றும் 19(2) ஆம் பிரிவு | இந்த அதிகார சட்டத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சபையினால் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2019 டிசம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை | 2020 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாக அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்களாக அரச நிறுவனங்கள் www.promise.lk வலைதளத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரச பெறுகைகள் நடைமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபை இந்த நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்காமையால் அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவை | ரூபா. 1,328 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதிக்கு 2023 ஆம் ஆண்டுக்காக 08 லொத்தர் சீட்டுக்களுக்கான அச்சிடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் வழங்குதலுக்கான அச்சிடுவோரைத் தெரிவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 10 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்காக 65 வாரங்கள் செலவிடப்பட்டிருந்தது. |

# சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

| சட்டங்கள், விதிகளுக்கான/ கட்டளைகளுக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|
| (i) 4.2.3. ஆம் பிரிவிற்கான 31 ஆவது மேலதிகம்<br><br>(ii) 2.9.2 பிரிவிற்கான 32 ஆவது மேலதிகம் | ரூபா. 1,328 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதிக்கு 2023 ஆம் ஆண்டுக்காக 08 லொத்தர் சீட்டுக்களுக்கான அச்சிடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் வழங்குதலுக்கான அச்சிடுவோரைத் தெரிவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 10 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்காக 65 வாரங்கள் செலவிடப்பட்டிருந்தது.<br><br>பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது முழுமையான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் 10 வாரங்களுக்கு உட்பட்ட காலத்தினுள் பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டுக்கான லொத்தர் சீட்டு அச்சிடுவதற்கான வழங்குனர்களைத் தெரிவு செய்யும் பெறுகை நடவடிக்கைகளுக்காக 65 வார காலம் செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த குழு அங்கத்தவர்களுக்கு முழுக் கொடுப்பனவாக ரூபா. 345,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| III. 4.2.1. ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2022 ஜனவரி 18 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02/2022 கொண்ட அரச வணிகத் திணைக்கள சுற்றறிக்கை | i. தொலைபேசி செலவு வரையறையைக் கருத்தில் கொள்ளாது அபிவிருத்தி லொத்தர் சபையின் 11 உத்தியோகத்தர்களுக்காக 2022 ஜனவரி தொடக்கம் 2023 பெப்ரவரி வரையான காலப் பகுதியில் தொலைபேசி செலவு கொடுப்பனவாக மொத்தமாக ரூபா. 141,599 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ii. தொலைபேசி செலவு கொடுப்பனவிற்கான உரித்தற்ற 53 உத்தியோகத்தர்களுக்கு மொத்தமாக ரூபா. 1,200,064 தொகை தொலைபேசி செலவு கொடுப்பனவாக மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் அரச வணிக திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |
| (உ) அரச வணிகத் திணைக்களத்தின் 2015 மே 25ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PED/1/2015 கொண்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகன உரித்தற்ற ஐந்து உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்கி இருந்ததுடன் அதற்கான எரிபொருள் செலவாக மீளாய்வாண்டில் மொத்தமாக ரூபா. 2,913,410 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஊ) 2016 மே 30 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 04/2016 கொண்ட அரச வணிகத் திணைக்கள சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகன உரித்தற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு குத்தகை முறைமையின் கீழ் சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றை வழங்கி இருந்ததுடன் அந்த மோட்டார் வாகனத்திற்காக மீளாய்வாண்டில் குத்தகையாக ரூபா. 2,028,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புகள் நீங்கலாக சபையின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும், விளைதிறன் கொண்டதாகவும் உரிய காலப்பகுதியில் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.

## 2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) அபிவிருத்தி லொத்தர் சபையினால் செயல்பாட்டு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் வெளி சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றினை உருவாக்குதல் மற்றும் தாபித்தல், பதவி அணியினரை பயிற்றுவித்தல் என்பவற்றுக்காகப் பொருத்தமான வழங்குனரைத் தெரிவு செய்வதற்கு தேவையான விலை மனு ஆவணங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் 2020 ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. இதனால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 68 சதவீத மாதாந்த சேவைக் கட்டண அதிகரிப்புடன் சேவை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு போட்டி விலை மனு ஒழுங்குமுறைக்கு புறம்பானதாக மென்பொருள் சேவை வழங்கும் நிறுவனத்தினைத் தெரிவு செய்து லொத்தர் செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ மென்பொருள் சேவையினைப் பெற்றுக் கொண்டதனால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் ரூபா.73,221,351 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் மென்பொருள் வழங்கும் நிறுவனம் என்பவற்றுக்கிடையே 2009 ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மென்பொருள் சேவை வழங்கும் நிறுத்தினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான ஒழுங்கமைப்பைக் கணக்காய்வு செய்வதற்கு சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அது தொடர்பாக மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பணிப்பாளர் சபையின் மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2021 கொண்ட செயற்பாட்டு பணி கோவையின் 3.2 (எ) ஆம் பிரிவின் பிரகாரம் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு படிக் கொடுப்பனவு ஒழுங்குமுறை அன்றி அபிவிருத்தி லொத்தர் சபையினால் மீளாய்வாண்டினுள் மொத்தமாக ரூபா. 105,739,646 தொகை ஊக்குவிப்பு படியாக பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா.25,442,131,713 தொகையான லொத்தர் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் பின்னரான விற்பனை வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது ரூபா.6,370,674,962 இனால் அதாவது 33% இனால் அதிகரித்திருந்த போதிலும் கடந்த வருடத்தின் தேறிய இலாப சதவீதமான 17%, மீளாய்வாண்டில் 14% வரையில் குறைவடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது விநியோகித்தல் செலவு 49% இனால் மற்றும் நிர்வாக செலவுகள் 17% இனாலும் அதிகரித்திருந்தமை இதற்கு பிரதான ரீதியில் காரணமாக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது அந்த இரு செலவு வகையினதும் அதிகரிப்பு ரூபா.2,319,819,639 ஆகும்.

(உ) பணிப்பாளர் சபையில் அனுமதியின் அடிப்படையில் அபிவிருத்தி லொத்தர் சபைக்கான தொழில் முயற்சிகள் வள திட்டமிடல் (ஙுசீ) செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக கணக்கீட்டு மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றைத் தாபிக்கும் பணி 2020 ஆம் ஆண்டு தொடக்கம் அனைத்து வருடத்திலும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுகைகள் நடவடிக்கை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் வோக்ஷோல் வீதியில் 234 ஆம் இலக்க கட்டடத்தை 2006 ஒக்டோபர் மாதம் தொடக்கம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமாக மீறப்பட்டிருந்த காரணத்தால் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா.723,780 தொகை மற்றும் அந்த வருடத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்த வாடகை தொகையின் ஒரு பகுதியான ரூபா. 4,976,220 ஆகிய தொகைகளின் மொத்தமான ரூபா.5,700,000 தொகையினை தற்போது 17 வருடங்களில் முற்றாக அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(எ) 1990 ஆம் ஆண்டில் வோட் பிரதேசத்தில் நபர் ஒருவருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூபா.2,520,000 தொகையான கட்டட வாடகை வைப்பு தொகையினை அறவிட்டுத் தருமாறு கோரி 23 வருடங்களுக்கு முன்னர் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு 2016 ஜனவரி 11 ஆம் திகதி கிடைத்திருந்தது. குறித்த தொகையினை அறவிட்டுக் கொள்ளுமாறு வழக்கு தீர்ப்பு வெளியிடப்பட்டு 07 வருட காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தத் தொகையினை அறவிடுவதற்கு சபை தவறி இருந்தது.

(ஏ) 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வியாபார கடன்பட்டோர் ரூபா. 414,095,595 மீதி காணப்பட்டதுடன் அதில் 1 வருடத்திற்கும் 2 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் காணப்பட்ட ரூபா.207,860 மீதியும் , 3 வருடத்தினை கடந்த ரூபா.2,800,000 மீதியும் அடங்கும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த கடன் மீதியினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தற்போது உலகில் காணப்படும் தொழில்நுட்ப போக்கு மற்றும் லொத்தர் சந்தையில் காணப்படும் போட்டித் தன்மை என்பவற்றை கருத்தில் கொண்டு லொத்தர் விற்பனையை டிஜிட்டல் ஊடகத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளுவதற்கு டிஜிட்டல் உள்ளீடு ஒன்றை னுடுடீ ஞறநநி எனும் பெயரில் ஆரம்பித்து ளுஆளு ஊடகம் ஊடாக நு லொத்தர் விற்பனை செய்தல், விற்பனை மேம்பாடு உள்ளிட்ட பணிகளுக்காக 2023 ஆம் ஆண்டில் வரவு செலவு மூலம் ரூபா. 57,625,000 தொகையினை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் நு லொத்தர் விற்பனை மேம்பாட்டு பணிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா. 1,643,873 தொகை மட்டுமாக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 3% மட்டுமேயான மிகக் குறைந்து சதவீதமாகும்,



**டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# கணக்காய்வு அறிக்கை 2023 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| **1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**<br>**அ) இலங்கை கணக்கீட்டு நியமம்**<br>(i) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் 9 ஆம் பந்திக்கு அமைய இருப்பு மொத்த செலவு அல்லது தேறிய மதிப்பீட்டுப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியே நிதிக் கூற்றுகளில் காட்டப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி பௌதிக ரீதியில் களஞ்சியசாலையில் இருக்காத மொத்த செலவு ரூபா. 443,609 ஆன தேறிய மதிப்பீட்டுப் பெறுமதி இல்லாத 2883 உடனடி லொத்தர் பத்திரங்கள் கொள்வனவு செலவிற்கு, இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் தடுத்து வைக்கப்பட்ட ஈட்டிய ஒதுக்கம் மற்றும் உடனடி லொத்தர் பத்திரங்களின் இறுதி இருப்பு அந்தத் தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | மொத்த செலவு ரூபா. 443,609 ஆன உடனடி லொத்தர் சீட்டுப் புத்தகத் தொகை ஒன்று 2023.12.31 ஆம் திகதியில் சபை வளாகத்தினுள் இல்லாத போதிலும் சபைக்குச் சொந்தமான இருப்பு என்பதனால் சபையின் நிதிக் கூற்றுக்களினுள் காட்டப்பட்டிருந்தது.<br><br>இந்த சீட்டுப் புத்தக விற்பனைகளுக்கு உரிய பணம் கிடைக்காமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த பரீட்சிப்பின் பரிந்துரைக்கு அமைய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் லொத்தர் சீட்டுப் புத்தகத்துக்கு நடைமுறையில் தேறிய பெறுமதி இல்லை என்பதனால் லொத்தர் சீட்டுக்களின் விலைக்கு அமைய கொள்வனவு மொத்த செலவு கணக்கிடப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 07 ஆம் பந்திக்கு அமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உருப்படி ஒன்றில் இருந்து பெற்றுக் கொள்ள கூடிய எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்குள் வருமாக இருந்தால் அல்லது அதன் மொத்த செலவு நம்பிக்கைக்குரிய வகையில் அளவிடக்கூடிய வகையில் இருக்குமானால் மட்டுமே அது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என அறியப்பட வேண்டிய போதிலும் பொருளாதார நன்மை நிறுவனத்திற்குள் வரும் எனும் நிபந்தனையைப் பூர்த்தி செய்ய முடியாத பௌதீக ரீதியில் சபைக்கு சொந்தமற்ற ரூபா. 8,095,000 பெறுமதியான கெப் வாகனம் மற்றும் தற்போது பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ள ரூபா. 7,641,159 பெறுமதியான 07 சீட்டிழுப்பு இயந்திரங்கள் மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | இங்கு குறிப்பிடப்பட்ட ரூபா. 8,095,000 பெறுமதியான டபிள் கெப் வாகனம் சபையிடம் பௌதிக ரீதியாக இல்லை எனும் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். இந்த கெப் வாகனம் தொடர்பாக தற்போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு (வழக்கு இலக்கம் - DMR/4781/2021) உள்ளதுடன் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனால் அது நிலையான சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 7,641,119 பெறுமதியினுள் 4 சீட்டிழுப்பு இயந்திரங்களும் 1 வளி சீராக்கியும் மற்றும் சீட்டிழுப்பில் பயன்படுத்தப்படும் பந்துகளும் உள்ளடங்கும். இந்த உருப்படிகள் சீட்டிழுப்புப் பணிக்காக சபையினால் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட உருப்படிகள் என்பதுடன் இவை சபையின் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த உருப்படிகள் சீட்டிழுப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் விசேட இயந்திரங்கள் என்பதனால் இந்த இயந்திரங்களை அகற்றும் போது சிக்கல்கள் காணப்படுகின்றன. இதில் உள்ள தனித் தன்மை மற்றும் சேதமடைந்த நிலைமை காரணமாக இவற்றை வெளித்தரப்பினருக்கு பயன்படுத்துவது கடினமாக உள்ளது. தற்போது இந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாத காரணத்தால் இந்த இயந்திரங்கள் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளமை இடம்பெற்றுள்ளது. |
| (இ ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 36 ஆம் பிரிவுக்கு அமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய முழு வகுப்பினையும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் தெரிவு செய்யப்பட்ட ஒரு சில உருப்படிகள் மட்டும் மீள்மதிப்பீடு செய்யத் தேவையற்ற போதிலும் அலுவலக உபகரணங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள், இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், கணணிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், கணினி மென்பொருள் போன்ற ஐந்து சொத்து வகுப்புகளுக்கு உரிய ஒன்பது கணக்குகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த மீதி ரூபா. 245,194,377 ஆன உருப்படிகளில் ரூபா. 86,478,373 பெறுமதியான உருப்படிகள் மீளாய்வாண்டினுள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்பாட்டு காலத்தினைத் தீர்மானிப்பதற்கு சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் வழங்கப்படும். 2023 ஆம் ஆண்டில் சபையின் அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்வதற்கு உட்படுத்தப்பட்ட போதிலும் கணினி உதிரிப் பாகங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் தொடர்பில் குழுவின் தீர்மானமானது 2023.01.01 ஆம் திகதியில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு இறுதி சொத்துக்கள் மட்டும் மீள் மதிப்பீடு செய்தல் ஆகும். இதில் பொருண்மையை கருத்தில் கொண்டு சிறிய பெறுமதியை கொண்ட பாரிய உருப்படி தொகையினை மீள் மதிப்பீடு செய்தல் நடைமுறையில் சாத்தியமற்றது எனும் விடயம் அடிப்படையாக உள்ளது. LKAS 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பொருண்மை பெறுமதி (Materiality) கருதுகோள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது.<br><br>மேலும் தற்போது பயன்படுத்தப்பட முடியாத சொத்துக்கள், சேதமடைந்த நிலைமையில் காணப்படும் அல்லது அகற்றப்பட வேண்டிய சொத்துக்களாக இருக்குமானால் அந்த சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கினுள் காட்டுதல் மற்றும் பெறுமானத்தேய்விடல் நடைமுறையில் பொருத்தமற்றது என்பதனால் மீள் மதிப்பீடு செய்யாதிருக்க குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த ரூபா.86,478,373 பெறுமதியின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது 2023.12.31 ஆம் திகதியில் பெறுமான தேய்வு பூர்த்தி செய்யப்படாத மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்படும் சொத்துக்களின் கூட்டுத்தொகையாகும். சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது அனைத்து சொத்து வகுப்புகளும் மீள்மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூபா. 86.478.373 பெறுமதியானது சபையின் மொத்த சொத்துக்களுள் 3% என்பதனால் இவ்வாறு தொடர்ந்து மொத்த செலவில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இங்கு நடைமுறை நிலைமை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. கணக்கு பயன்பாட்டாளரின் தீர்மானத்திற்கு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தாத பெறுமதியினைக் குறிப்பதற்கு சிக்கலற்ற முறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பிரதான முகாமைத்துவ நபர் குழுக்களின் நன்மைகளின் மொத்தமானது குறுகிய கால சேவை நன்மை, பிந்தைய சேவை நன்மை, வேறு நீண்ட கால நன்மை மற்றும் சேவை பூர்த்தியின் போதான நன்மை எனும் ரீதியில் காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடம் தொடக்கம் கணக்காய்வு சுட்டிக்காட்டி உள்ளதன் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) அபிவிருத்தி லொத்தர் சபையினால் மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் ஜுலை 05 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் சனிதா அதிர்ஷ்டம், லக்கின அதிர்ஷ்டம், ஜயோதா, கப்ருக்க, அத கோடிபதி மற்றும் வலம்புரி ஆகிய 06 லொத்தர் சீட்டுக்களின் விசேட இரண்டாவது சீட்டிழுப்பிக்காகவும் மற்றும் ஜுலை 06 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் சனிதா அதிர்ஷ்டம், லக்கின அதிர்ஷ்டம், ஜயோதா, சூப்பர் போல், கப்ருக்க, அத கோடிபதி, சுப்பிரி தன சம்பத் மற்றும் வலம்புரி ஆகிய 08 லொத்தர் சீட்டுகளில் “இரண்டாவது வரம்” மற்றும் “செகண்ட் சான்ஸ்” சீட்டிழுப்பிக்கான பரிசுத் தொகையாக செலுத்தப்பட்ட ரூபா. 761,885,800 தொகையானது மீளாய்வாண்டில் பரிசு செலவாகக் கணக்கீடு செய்யப்படாது பரிசு ஒதுக்கக் கணக்கில் சீராக்கல் செய்யப்பட்டதனால் மீளாய்வாண்டில் அந்தத் தொகையினால் பரிசு செலவு குறைவாகவும் மற்றும் இலாபம் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய பொருளாதார பின்னடைவு நிலைமைக்கு முகம் கொடுத்து லொத்தர் கைத்தொழிலுக்கு உரிய மூலப் பொருட்களின் விலை அதிகரித்தமை மற்றும் உரிய சேவைகளின் விலைகள் அதிகரித்தமை என்பதன் அடிப்படையில் சீட்டு ஒன்றின் இலாபத்திற்கு ஏற்பட்ட பாதகமான தாக்கம் தொடர்பில் கவனத்தில் கொண்டு நிதி அமைச்சு அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகிய இரு நிறுவனங்களினதும் லொத்தர் சீட்டு ஒன்றின் விலை ரூபா. 20 இல் இருந்து ரூபா. 40 வரையில் அதிகரித்தல் பொருத்தமானது எனும் கொள்கை ரீதியிலான தீர்மானத்தினை மேற்கொண்டிருந்ததுடன் குறித்த தீர்மானத்தின் அடிப்படையில் 2023 ஜுலை மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டு ஒன்றின் விலை ரூபா. 40 வரையில் அதிகரித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>அத்தியாவசியம் அல்லாத பொருள் என்னும் தொகுதியினுள் கொள்ளப்படும் லொத்தர் சீட்டுக்களுக்கு பொருளாதாரத்தில் நெகிழ்வான கேள்வி நிலை காணப்படுகின்றது என்பதால் லொத்தர் சீட்டு ஒன்றின் விலை அதிகரிக்கும் அளவுடன் ஒப்பிடும் போது அதிக சதவீதத்தினால் லொத்தர் சீட்டுக்கு நிலவும் நுகர்வுக் கேள்வி வீழ்ச்சி அடையும் என்பதுடன் நடைமுறையில் இதற்கு முன்னர் லொத்தர் சீட்டு விலை புரள்வை அதிகரித்த சந்தர்ப்பங்களில் பாரிய அளவில் லொத்தர் சீட்டுகளின் விற்பனை புரள்வு வீழ்ச்சி அடைந்தது.<br><br>அதனால் 2023 ஜுலை மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் லொத்தர் சீட்டு ஒன்றின் விற்பனை விலை அதிகரித்தமையுடன் ஒப்பிடும் போது லொத்தர் சீட்டு தொடர்பில் ஏற்படும் நுகர்வு கேள்வியில் ஏற்படக்கூடிய எண்ணிக்கை ரீதியிலான பின்னடைவைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் இரண்டாவது வரம் மற்றும் செகண்ட் சான்ஸ் என மேலதிக சீட்டிழுப்புத் தடவைகளை நுகர்வோருக்கு அறிமுகப்படுத்தும் உத்தி முறையினை அபிவிருத்தி லொத்தர் சபையினால் பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் பின்பற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் லொத்தர் சீட்டுக்களுக்கு உள்ள நுகர்வோர் தேவை குறைவடையும் சதவீதத்தினைக் கட்டுப்படுத்தி சபையின் நாளாந்த புரள்வு குறைவடைவதனால் உருவாகும் வெற்றி அளவு குறைவடைவதன் அடிப்படையில் பொதுமக்கள் லொத்தர் சீட்டுக்களில் வெற்றி குறைக்கப்பட்டுள்ளது எனும் கருத்தினை இல்லாது செய்வதற்கு இந்த உத்தி முறையினை பின்பற்றுவதனால் ஓரளவு தூரத்திற்கு அதனைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது.<br><br>அதற்கமைய மேலே கூறப்பட்ட இரண்டாவது வரம் மற்றும் செகண்ட் சான்ஸ் எனும் மேலதிக வெற்றி வாய்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சபை பின்பற்றி உள்ள உத்தி முறையிலான தீர்மானத்தின் பலன் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. |

# கணக்காய்வு அறிக்கை 2023 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| | பணிப்பாளர் சபையினால் ஒவ்வொரு லொத்தர் சீட்டுக்கும் முன் அனுமதி பெறப்பட்ட பரிசு தொகை சதவீதத்தின் அடிப்படையில் சபையினால் பரிசு செலவானது வருமானக் கூற்றில் செலவு வைக்கப்படுவதுடன் சீட்டிழுப்பின் மூலம் ஏற்படும் பரிசு செலவு மற்றும் பணிப்பாளர் சபையின் முன் அனுமதி சதவீதத்தின் அடிப்படையிலான பரிசு செலவு ஆகிய இரண்டின் வித்தியாசம் பரிசு ஒதுக்க கணக்கின் மூலம் சீராக்கல் செய்யப்படுவதுடன் அவ்வாறு பரிசு ஒதுக்கக் கணக்கில் சேரும் பணத்தொகை, அபிவிருத்தி லொத்தர் சபை அதிகார சட்டத்தின் 18 (3) ஆம் பிரிவின் பிரகாரம் அதன் பின்னர் இடம்பெறும் அபிவிருத்தி லொத்தர்களின் பரிசு வழங்கலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் இரண்டாவது வரம் மற்றும் செகண்ட் சான்ஸ் சீட்டிழுப்பு சந்தர்ப்பங்களுக்காக செலுத்தப்பட்ட பரிசுத் தொகையும் பரிசு ஒதுக்க கணக்கின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆரம்பத்தில் இருந்தே இவ்வாறு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டு இறுதி கணக்குகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான சிக்கல் கணக்காய்வு பிரிவின் மூலம் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதை அவதானித்துள்ளேன்.<br><br>இதற்கமைய சபையானது, அபிவிருத்தி லொத்தர் சபை அதிகார சட்டத்தின் பிரகாரம் பரிசு ஒதுக்கக் கணக்கினைப் பயன்படுத்தி மேலதிக பரிசினை வழங்குதல் மேற்கொண்டுள்ளதுடன் பரிசு ஒதுக்கக் கணக்கில் சேகரிக்கப்பட்டிருந்த பணத் தொகையானது இதற்கு முந்தைய சந்தர்ப்பங்களிலும் வருமானக் கூற்றின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனால் மீண்டும் ஒருமுறை செலவாகக் காட்டப்பட வேண்டியதில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஊ) அபிவிருத்தி லொத்தர் சபையின் இருப்பு கணக்கெடுப்பு முறைமைக்கு அமைய எதிர்வரும் வருடத்தில் சீட்டிழுப்பிற்காக அச்சிடப்பட்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் களஞ்சியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள லொத்தர் சீட்டுகளின் பெறுமதி இறுதி இருப்பாக இனம் காணப்பட்ட போதிலும் 2024 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 27 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சீட்டிழுப்பிற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் களஞ்சியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த 4,605,000 லொத்தர் சீட்டுக்களின் பெறுமதியான ரூபா. 5,787,310 தொகை இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காத காரணத்தால் இறுதி இருப்பு மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | வழங்குனர்களிடம் இருந்து சீட்டுக்களின் தொகை சபையிடம் கிடைத்தவுடன் அந்த சீட்டுக்கள் சபையின் இருப்பாகக் கணக்கீடு செய்யப்படாததுடன் முதலாவதாக அந்த சீட்டுக்கள் சரியான விவரக் குறிப்புகளுக்கு இணங்க காணப்படுகின்றதா என்பதை உள்ளகக் கணக்காய்வு பிரிவு பரீட்சிப்பு செய்து உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொடுப்பர். அதன் பின்னர் குறித்த சீட்டிற்கு GRN வழங்கப்படும்.<br><br>குறித்த சீட்டானது சரியான விவரக் குறிப்புகளுக்கு இணங்க இல்லையெனில் அந்த தொகையினை ஏற்றுக்கொள்வது மறுக்கப்படும்.<br><br>அதற்கமைய சபையிடம் கிடைத்துள்ள சீட்டுக்கள் சரியான விவர குறிப்புகளுக்கு இணங்க உள்ளது என்பதற்கான உறுதியினைப் பெற்றுக் கொண்ட பின்னர் (Quality Assurance check ) மற்றும் GRN வழங்கப்பட்டதன் பின்னர் அந்த சீட்டானது சபைக்கு உரிய இருப்பாகக் கணக்கீடு செய்யப்படும்.<br><br>கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 460,500 சீட்டுப் புத்தகங்களின் எண்ணிக்கை 2023.12.31 ஆம் திகதியில் களஞ்சியசாலைக்குக் கிடைத்திருந்த போதிலும் அந்த சீட்டுப் புத்தக தொகை சரியான விவரக் குறிப்புகளுக்கு இணங்க உள்ளனவா என்பது உறுதிப்படுத்தப்பட்டு GRN வழங்கப்பட்டிருக்காததால் அந்த சீட்டுப் புத்தகங்களின் தொகை 2023.12.31 ஆம் திகதியில் கணக்கீடு செய்யப்படவில்லை.<br><br>எவ்வாறு இருப்பினும் எம்மால் 2023.12.31 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட வருட இறுதி இருப்பு மதிப்பில் இந்த சீட்டுப் புத்தகத் தொகையினை பரீட்சிப்பு செய்து கணக்கீடு செய்யப்படாத சீட்டுப் புத்தகத் தொகையின் கீழ் வேறாகக் காட்டப்பட்டுள்ளது. |
| (எ) அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களுக்கு ஓய்வுபெறும் போது அல்லது சேவையை விட்டு வெளியேறும் போது அவர்களுக்கு வழங்கப்படும் பணிக்கொடையை செலுத்துவதற்காக இரண்டு அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்ட 06 நிலையான வைப்புத்தொகைகளுக்கு மதிப்பாய்வின் கீழ் ஆண்டின் டிசம்பர் 31 இல் பெறத்தக்க ரூ.6,619,629 வட்டி வருமானம் பரிசீலிக்கப்படவில்லை. நிகர ஊழியர் நலன் பொறுப்பு மற்றும் வட்டி வருமானம் தற்போதைய சொத்துக்களின் கீழ் நிலையான வைப்பு மதிப்புக்கு சேர்க்கப்பட்டது. இதன் விளைவாக, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் நிலையான வைப்புத்தொகையின் மீதி மற்றும் பணியாளர் நன்மைப் பொறுப்பின் மீதியானது அந்தத் தொகையால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. | வட்டி வருமானம் ரூ.6,619,629 என்பது சபையின் பெற வேண்டிய வட்டி வருமானம் மற்றும் சபை வட்டி வருமானத்தை மீண்டும் நிலையான வைப்புத்தொகையுடன் சேர்த்து வருமானத்தை முதலீடு செய்யவில்லை. நிகர ஊழியர் நன்மைப் பொறுப்பைக் கணக்கிடுவதில் அது கருத்தில் கொள்ளாமல் தற்போதைய சொத்துகளின் கீழ் நிலையான வைப்புத் தொகையின் மதிப்புடன் சேர்க்கப்பட்டது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (ஏ) ச.தொ.ச. நிறுவனத்தினால் 2009 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா.592.500 பெறுமதியான 123 பரிசு வவுச்சர் பத்திரங்கள் நிதிநிலைமைக் கூற்றில் பரிசுப் பொருட்களின் இறுதி இருப்பாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இந்த வவுச்சர் பத்திரங்கள் லொத்தர் சபைக்குக் கிடைத்து மீளாய்வாண்டு இறுதி வரையில் 14 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்ததால் மற்றும் அதற்கான தொகையினைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டதால் அதற்குத் தேவையான சீராக்கல் மேற்கொள்ளப்படாது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா.592,500 பெறுமதி கொண்ட 123 வவுச்சர்களின் பெறுமதியினை மீண்டும் அறவிடுதல் தொடர்பாக உரிய அமைச்சு மற்றும் இலங்கை ச.தொ.ச. நிறுவனம் என்பவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் தீர்மானத்திற்கு அமைய அந்த பெறுமதியினை அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்படாததுடன் அந்த தீர்மானங்கள் சிலவற்றின் சாராம்சங்களைப் பின்வருமாறு குறிப்பிட முடியும். |
| | 01. அந்த வவுச்சர்கள் தொடர்பில் வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு செயலாளர் தெளிவுபடுத்தப்பட்டு இருந்ததுடன் குறித்து தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய 2021/04/05 மற்றும் 2021/08/21 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்கள் மூலம் குறித்த வவுச்சர்களின் பெறுமதியினை மீண்டும் செலுத்துமாறு அமைச்சின் செயலாளரால் இலங்கை ச.தொ.ச நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>02. 2022/05/24 குறித்த வவுச்சர் பெறுமதியினை செலுத்தாமை தொடர்பில் நுகர்வோர் நடவடிக்கை தொடர்பான அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த நிறுவனத்தினால் 2022.09.09 ஆம் திகதி இலங்கை ச.தொ.ச. நிறுவனம் அனுப்பியுள்ள கடிதத்திற்கு அமைய 10 நாட்களுக்குள் உரிய பெறுமதியினைத் தீர்க்குமாறு தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.<br><br>03. 2023/01/16 ஆம் திகதி கடிதம் மூலம் வியாபாரம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரினால் மேலே கூறப்பட்ட வவுச்சர்கள் 6 மாதங்கள் வரையில் மீண்டும் செயல்படுத்துவதற்கு அல்லது மேலே கூறப்பட்ட பெறுமதிக்கு சமனான பொருட்களை இலங்கை ச.தொ.ச. நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கை ஏற்படுத்தி கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.<br><br>04. அந்த 123 வவுச்சர்களின் பெறுமதியை மீண்டும் அறவிடுவது தொடர்பில் தேவையான ஆலோசனைகளுக்காக அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபையிடம் அனுப்பியதுடன் நமது நிறுவனத்தின் பணிப்பாளராக நடவடிக்கை மேற்கொள்ளும் வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு செயலாளரினால் அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் இலங்கை ச.தொ.ச. நிறுவனம் ஆகிய இரு தரப்பினரும் அரச நிறுவனங்கள் என்பதனால் குறித்த வவுச்சரை மீண்டும் செயல்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என எமக்கு தெரிவிக்கப்பட்டு இருந்தது.<br><br>அதே போன்று வணிக அமைச்சு செயலாளரினால் எமக்கு பிரதியிடப்பட்டு 2024.01.02 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் மூலம் குறித்த வவுச்சர்களை மீண்டும் செயல்படுத்தி பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு இலங்கை ச.தொ.ச. நிறுவனத்தின் தலைவர் தெளிவுபடுத்தப்பட்டுள்ளார். |

# கணக்காய்வு அறிக்கை 2023 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| | இவ்வாறான நிலைமையில் 123 வவுச்சர்களின் பெறுமதியான ரூபா. 592,500 தொகையினை மீண்டும் அறவிடுவதற்கு முடியும் என்பதை மேலே கூறப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அவதானிக்க கூடியதாக இருந்ததால் அந்த மீதி நடைமுறை சொத்தாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.<br><br>ச.தொ.ச. நிறுவனத்தினால் இந்த வவுச்சர்களை மீண்டும் செயல்படுத்தி வழங்க முடியாது என கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதனால் அந்த வவுச்சர்களின் மீதியை இன்னமும் கணக்குகளில் பேணிச் செல்லுதல் பயனற்ற விடயம் என்பது வெளிப்படுத்தப்பட்டமையால் கணக்குகளில் இருந்து அகற்றுதல் தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிவுரையின் அடிப்படையில் 2024 மே மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற அபிவிருத்தி லொத்தர் சபை பணிப்பாளர் சபையிடம் அனுப்பப்பட்டதுடன் அந்த தொகையினைக் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. |
| (ஐ) அபிவிருத்தி லொத்தர் சபையில் சாப்பாட்டு அறை, களஞ்சிய அறை மற்றும் எல்லை சுவர் என்பவற்றைத் திருத்துவதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 1,728,884 தொகை செலவானது மீளாய்வாண்டின் இறுதி வரையில் 06 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் தேவையான கணக்கிட்டு சீராக்கல் மேற்கொள்ளப்படாது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வேலையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | இந்தக் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாப்பாட்டு அறை, களஞ்சிய அறை மற்றும் எல்லை சுவர் என்பவற்றுக்கான திருத்தல் வேலை தொடர்பில் இதுவரையில் வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. சொத்தாக இனம் காண்பதற்கு குறித்த சொத்தானது பலன் கிடைக்கக்கூடிய மட்டத்தில் இருத்தல் வேண்டும். அதனால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மேலே கூறப்பட்ட நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டு இருக்காத காரணத்தால் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படி மூலதனம் ஆக்கப்பட்டு தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட யுனைட்டட் செய்தித்தாள் நிறுவனம் போன்ற இரண்டு நிறுவனங்களுக்கும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சபையின் நிதிக் கூற்றுகளுக்கு அமைய செலுத்தப்பட வேண்டிய தொகையானது முறையே ரூபா. 11,884,975 மற்றும் ரூபா. 4,735,627 ஆக இருந்த போதிலும், அந்த நிறுவனத்தினால் கணக்காய்வுக்கு நேரடியாக உறுதிப்படுத்திய தொகை முறையே ரூபா. 22.606.401 மற்றும் ரூபா. 2,754,832 ஆகும். | ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், யுனைட்ட செய்தித்தாள் நிறுவனம் ஆகிய இரு நிறுவனங்களுக்கும் அபிவிருத்தி லொத்தர் சபை செலுத்த வேண்டிய பெறுமதிகளிடையே ரூபா. 10,721,426 மற்றும் ரூபா. 1,980,795 வேறுபாடு காணப்படுவதுடன் அந்த மீதியை பரீட்சிப்பு செய்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்படக்கூடியதாக உள்ளது.<br><br>ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் யுனைட்டட் செய்தித்தாள் நிறுவனம் என்பன உரிய ஊடக நிறுவன கணக்காய்விற்கு நேரடியாக உறுதிப்படுத்திய மீதியை பெற்றுக் கொண்டுள்ளது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) உள்ளடங்களாக என்பதுடன் திரண்ட செலவு கணக்கீடு செய்யப்படுவது வரி (VAT) பெறுமதி உள்ளடக்கப்படாமல் ஆகும்.<br><br>அதே போன்று அந்த ஊடக நிறுவனம் இந்த மீதியைக் கணக்கீடு செய்துள்ளது 2023.12.31 ஆம் திகதியில் அந்த நிறுவனத்திடம் கிடைத்திருக்காத விலைப்பட்டியல் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டே என்பதுடன் அபிவிருத்தி லொத்தர் சபையினால் செலுத்தப்பட்ட எனினும் அந்த ஊடக நிறுவனத்திற்கு கிடைக்காத காசோலைகளின் பெறுமதிக்கு சீராக்கல் செய்யப்பட்டு (கொடுப்பனவு செய்யப்பட்டதாகக் கருதி) திரண்ட செலவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>செய்தித்தாள் நிறுவனம் 2023.12.31 ஆம் திகதியில் அவர்களது திரண்ட செலவினைக் கணக்கீடு செய்துள்ளது அபிவிருத்தி லொத்தர் சபையுடன் மேற்கொள்ளப்படும் நேரடி விளம்பர செலவுக்காக மட்டுமே என்பதுடன் குறித்து முகவர் நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட விளம்பர செலவு பெறுமதி உள்ளடக்கப்படவில்லை என்பதனை சபையிடம் தெரிவித்துள்ளது.<br><br>அதனால் அபிவிருத்தி லொத்தர் சபையில் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மீதி மற்றும் அந்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட மீதி என்பவற்றை ஒப்பிடுதல் நடைமுறையில் சாத்தியமற்றது என்பதுடன் அந்த மீதிகள் சமனற்று இருப்பதற்கு சாத்தியம் உள்ளது. |
| (ஓ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதிக் கூற்றுக்கு அமைய அலுவலக உபகரணங்கள் மற்றும் கையடக்க தொலைபேசி மீதி, தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மீதி, கணனி உதிரிப் பாகங்கள் மீதி என்பன முறையே ரூபா.43,416,368, ரூபா.14,802,820 மற்றும் ரூபா.57,425,324 ஆக இருந்த போதிலும் அதற்குரிய அட்டவணைகளுக்கு அமைய அந்த மீதிகள் முறையே ரூபா.43,353,012, ரூபா.14,881,156 மற்றும் ரூபா.57,175,052 ஆகும். | கணக்காய்வு விசாரணையில் (இலக்கம் PUR/F/DLB/2023/AQ-34) குறிப்பிடப்பட்டுள்ள இந்த வேறுபாடு 2024 ஆம் ஆண்டு கணக்குகளில் திருத்தப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| **2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை** | | |
| 2.2.2 **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.** | | 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் சுப்பர் போல் மற்றும் கோடிபதி சனிதா லொத்தர் சீட்டுக்களின் சீட்டிழுப்புப் பரிசுகளாக கொள்வனவு செய்யப்பட்ட 03 மோட்டார் சைக்கிள்கள் அகற்றப்பட்டு அந்தத் தொகையை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவதற்கு 2022 மே 31 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br><br>எனினும் 2022.10.11 ஆம் திகதி இடம் பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாவது இந்த மோட்டார் சைக்கிள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்படும் எனவாகும். அதற்கமைய ஜனாதிபதி செயலகத்திற்கு குறித்த விபரங்கள் 2023.03.30 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் 2023 மே மாதத்தில் அந்த மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 2023.05.22 ஆம் திகதி விலைப்பட்டியலுடன் குறித்த விபரங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>எனினும் அதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்திலிருந்து எதுவித பதிலும் தெரிவிக்கப்படாததால் மீண்டும் 2023.11.21 ஆம் திகதி மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு தெரிவிக்கப்பட்டிருந்ததாவது மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுமாயின் 2023.12.01 ஆம் திகதிக்கு முன்னதாக கொள்வனவு செய்யுமாறு ஆகும். |
| **சட்டங்கள், விதிகளுக்கான/ கட்டளைகளுக்கான தொடர்பு** | **அவதானிப்பு** | எனினும் இது தொடர்பில் எதுவிதமான பதிலும் 2024.01.31 ஆம் திகதிவரையில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்காததால் இந்த 03 மோட்டார் சைக்கிள்களும் அகற்றப்பட்டு அந்தத் தொகையினை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவதற்கு மீண்டும் பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்குப் பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று 2024.02.21 ஆம் திகதி இடம் பெற்ற 292 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய இந்த 03 மோட்டார் சைக்கிள்களையும் ஒழுங்கான முறையில் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 02 மாத காலத்தினுள் முறையான அகற்றல் முறைமைக்கு உட்படுத்தப்பட்டு அந்த நிதியை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (அ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச் சட்டம்<br><br>(i) 17(5) ஆம் பிரிவு | பரிசில்களை வென்றோர் உரித்துக் கோராத 06 மாத காலத்தை கடந்த பரிசில்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைக்கும் தொகையை முதலாவதாக நிதியத்திற்கும் அதன் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்க வேண்டிய போதிலும் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பரிசில்களாக வழங்குவதற்கு கொள்வனவு செய்த ரூபா.779,750 கூட்டு பெறுமதியுடைய மூன்று மோட்டார் துவிச்சக்கர வண்டிகள் விற்பனை செய்யப்பட்டு அந்த தொகை அதிகாரச் சட்டத்திற்கமைய ஈடுபடுத்த மீளாய்வாண்டின் 2022 மே 30 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணிகள் இதுவரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | |
| ii. 19(1) மற்றும் 19(2) ஆம் பிரிவு | இந்த அதிகார சட்டத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சபையினால் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள விதிகள் உள்ளடக்கப்பட்ட ஆவணம் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதில் கணனி ஒழுங்கமைப்பிற்கு உரிய விதிகள், கொழும்பு பல்கலைக்கழக கணனி பிரிவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதுடன் மேலும் சபையின் பிரிவுகளுக்கு இடையேயான நடவடிக்கை தொடர்பாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி திருத்தம் செய்யப்பட்ட வரைவினை எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

# கணக்காய்வு அறிக்கை 2023 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை | 2020 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாக அரசு கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்களாக அரச நிறுவனங்கள் www.promise.lk வலைதளத்தின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரச பெறுகைகள் நடைமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபை இந்த நடைமுறையின் கீழ் பதிவு செய்யப் பட்டிருக்காமையால் அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்க வில்லை. | e-GP இற்காக சபை பதிவு செய்துள்ளதுடன், அதற்குரிய பயிற்சி வேலை திட்டங்களில் உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர். அதில் வழங்கிய ஆலோசனைகள் மற்றும் அந்த ஒழுங்கமைப்பின் ஆரம்ப பயிற்சி மாதிரிகளை நிறைவேற்றுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவை | | இந்த பெறுகைக்குரிய விலை மனு கோரல் தொடர்பான தீர்மானம் பெறுகைகள் குழுவினால் 2022.08.15 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் விலை மனுக்களை திறத்தல் 2022.09.15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. விலை மனு ஒப்படைத்தல் தொடர்பான இறுதி பெறுகைகள் குழு தீர்மானம் 2023.02.06 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதுவரையில் முழுமையான பெறுகைகள் முறைமைக்கு உரியதான 03 மதிப்பீட்டுக் குழு கூட்டங்கள் மற்றும் 04 பெறுகைகள் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. 2023.02.06 ஆம் தகதி பெறுகைகள் குழு தீர்மானத்தினை விலை மனுதாரருக்கு அறிவித்தல் மற்றும் மேன்முறையீடு பரிசீலனை செய்தல், விலை மனு ஒப்படைப்பதற்குரிய அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய பணிகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர் விலை மனு ஒப்படைத்தல் 2023.04.21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>அதற்கமைய, இந்த பெறுகைகளுக்காக 65 வார காலம் செலவிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வினால் தெரிவிக்கப்பட்டிருந்த வகையில் இந்த பெறுகைகள் 10 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது தவறானது அல்ல. பெறுகைகள் வழிகாட்டி கோவையில் 4.2.3. 31 திருத்தலின் பிரகாரம், இந்த பெறுகைகளுக்கு உரிய விலை மனுவினை சமர்ப்பிப்பதற்கு விலை மனுதாரருக்கு வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய காலம் 10 வாரங்கள் ஆகும். பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.3. இல் 88 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைகள் கட்டங்களானது முழு பெறுகைகளுக்கும் உரியதாக நிறைவேற்றப்பட வேண்டியதுடன் அதற்காக செலவிடப்படக்கூடிய ஆகக்கூடிய காலம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அமைய இந்த பெறுகைக்காக 38 வார காலம் பெறுகைகள் வழிகாட்டி கோவைக்கு அமைய வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய இங்கு 38 வார காலத்தினுள் இந்த பெறுகைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| (i) | 4.2.3. ஆம் பிரிவிற்கான 31 ஆவது மேலதிகம் | ரூபா. 1,328 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு 2023 ஆம் ஆண்டுக்காக 08 லொத்தர் சீட்டுக்களுக்கான அச்சிடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் வழங்குதலுக்கான அச்சிடுவோரைத் தெரிவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 10 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்காக 65 வாரங்கள் செலவிடப்பட்டிருந்தது. | |
| (ii) | 2.9.2 பிரிவிற்கான 32 ஆவது மேலதிகம் | பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது முழுமையான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் 10 வாரங்களுக்கு உட்பட்ட காலத்தினுள் பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டுக்கான லொத்தர் சீட்டு அச்சிடுவதற்கான வழங்குனர்களைத் தெரிவு செய்யும் பெறுகை நடவடிக்கைகளுக்காக 65 வார காலம் செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த குழு அங்கத்தவர்களுக்கு முழுக் கொடுப்பனவாக ரூபா. 345,000 செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் குழுவிற்கான கொடுப்பனவை மேற்கொள்ளும் போது அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகள் கால அட்டவணைக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதைக் கவனத்தில் கொண்டு அந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். அதற்கு அமைய அதன் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை கால அட்டவணைக்கு இணங்க தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைகள் குழு என்பன அதன் நடவடிக்கைகளை நிறைவேற்றியதன் அடிப்படையில் அந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 10 வார காலத்தில் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் என்பது சரியான கூற்று அல்ல. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| (iii) | 4.2.1. ஆம் பிரிவு | மீளாய் வாண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அரச கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெறுகை உருப்படிக்கும் உரிய கட்டங்கள் தொடர்ச்சியாக திருத்தப்படுவதனால் விரிவான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (ஈ) | 2022 ஜனவரி 18 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02/2022 கொண்ட அரச வணிகத் திணைக்கள சுற்றறிக்கை | i. தொலைபேசி செலவு வரையறையைக் கருத்தில் கொள்ளாது அபிவிருத்தி லொத்தர் சபையின் 11 உத்தியோகத் தர்களுக்காக 2022 ஜனவரி தொடக்கம் 2023 பெப்ரவரி வரையான காலப் பகுதியில் தொலைபேசி செலவு கொடுப்பனவாக மொத்தமாக ரூபா. 141,599 அதிகமாகச் செலுத்தப் பட்டிருந்தது.<br>ii. தொலைபேசி செலவு கொடுப்பனவிற்கான உரித்தற்ற 53 உத்தியோகத் தர்களுக்கு மொத்தமாக ரூபா. 1,200,064 தொகை தொலைபேசி செலவு கொடுப்பனவாக மீளாய்வாண்டினுள் செலுத்தப் பட்டிருந்ததுடன் அதற்காக 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் அரச வணிக திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | தொலைபேசி செலவு எல்லையை விஞ்சி பெறப்பட்ட ரூபா. 141,599 தொலைபேசி கட்டணத்திற்குரிய பதவியணி அங்கத்தவர்களிடம் இருந்து மாதாந்த சம்பளத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>அரச வர்த்தக திணைக்களத்தினால் 2015 மே 25 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02/2015 கொண்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி கொடுப்பனவு திருத்தப்பட்டுள்ளதுடன் திருத்தப்பட்ட எல்லையை மீறி செலவிடப்பட்ட மொத்த செலவு அந்தந்த பதவியணி அங்கத்தவர்களிடம் இருந்து 2022 பெப்ரவரி மாதம் தொடக்கம் அறவிடுவதற்குத் தேவையான அனுமதியினை 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி இடம்பெற்ற 275 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பில் 2023.12.12 ஆம் திகதியிடப்பட்டு அரச வர்த்தக துணைக்களத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்காக 2024.03.07 ஆம் திகதியிடப்பட்டு அரச வர்த்தக திணைக்களத்திடம் இருந்து கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு இருந்ததுடன் அந்த கடிதத்தின் பிரகாரம் தொலைபேசி கொடுப்பனவு வழங்குவதற்கு மற்றும் தொலைபேசி வழங்கும் முறைமை தொடர்பில் புதிய வழிமுறை தயாரிக்கப்பட்டு அதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய இது தொடர்பில் ஒழுங்கான வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு 2024.05.20 ஆம் திகதி இடம்பெற்ற 294 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய இதன் பின்னர் அரச வர்த்தக திணைக்களத்திடமிருந்து வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முறைமைக்கு அமைய செயல்படுத்தப்படும். |
| (உ) | அரச வணிகத் திணைக்களத்தின் 2015 மே 25ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PED/1/2015 கொண்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகன உரித்தற்ற ஐந்து உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்கி இருந்ததுடன் அதற்கான எரிபொருள் செலவாக மீளாய்வாண்டில் மொத்தமாக ரூபா. 2,913,410 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2023.07.09 ஆம் திகதி இடப்பட்ட அரச வர்த்தக திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தேசிய லொத்தர் சபை பின்பற்றிய முறைமைக்கு ஒத்த முறைமையை அபிவிருத்தி லொத்தர் சபையும் பின்பற்றி உதவிப் பொது முகாமையாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குத் தேவையான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக 2024 மே மாதம் 20 ஆம் தேதி இடம்பெற்ற 294 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று அனுப்பப்பட்டிருந்தது. அதற்கமைய அரச வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த ஆலோசனைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு அனுமதி கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அந்த புதிய முறைமை 2024 ஜுன் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும். |
| (ஊ) | 2016 மே 30 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 04/2016 கொண்ட அரச வணிகத் திணைக்கள சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகன உரித்தற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு குத்தகை முறைமையின் கீழ் சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றை வழங்கி இருந்ததுடன் அந்த மோட்டார் வாகனத்திற்காக மீளாய்வாண்டில் குத்தகையாக ரூபா. 2,028,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சபையின் மோட்டார் வாகனங்களில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் 03 மோட்டார் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அந்த மோட்டார் வாகனங்களுள் 02 மோட்டார் வாகனங்கள் பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளருக்கு இணைக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய மோட்டார் வாகனம் உதவிப் பொது முகாமையாளருக்கு இணைக்கப்பட்டுள்ளது. சபையின் ஒதுக்கத்தில் காணப்படும் மோட்டார் வாகனம் ஒன்று பிரதிப் பொது முகாமையாளருக்கு இணைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த பிரதிப் பொது முகாமையாளருக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனம் இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தேசிய லொத்தர் சபை பின்பற்றும் முறைமைக்கு ஒத்த முறைமையே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த முறைமைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

# கணக்காய்வு அறிக்கை 2023 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| **2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**<br>(அ) அபிவிருத்தி லொத்தர் சபையினால் செயல்பாட்டு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் வெளி சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றினை உருவாக்குதல் மற்றும் தாபித்தல், பதவி அணியினரை பயிற்றுவித்தல் என்பவற்றுக்காகப் பொருத்தமான வழங்குனரைத் தெரிவு செய்வதற்கு தேவையான விலை மனு ஆவணங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் 2020 ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. இதனால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 68 சதவீத மாதாந்த சேவைக் கட்டண அதிகரிப்புடன் சேவை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு போட்டி விலை மனு ஒழுங்குமுறைக்கு புறம்பானதாக மென்பொருள் சேவை வழங்கும் நிறுவனத்தினைத் தெரிவு செய்து லொத்தர் செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ மென்பொருள் சேவையினைப் பெற்றுக் கொண்டதனால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் ரூபா.73,221,351 செலுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளுக்கு உரிய விடயப் பரப்பு திருத்தப்பட்டு மீண்டும் விலை மனு கோருவதற்கு 2020 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய இந்த நிறுவனத்திற்கு, முழுமையான ரீதியில் சபைக்கு உரிமைத்துவம் கிடைக்கும் வகையில் (With Source Cord) லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றை உருவாக்குதல் மற்றும் அதற்காக தெரிவு செய்யப்படும் வழங்குநர் நிறுவனத்தினால் மென்பொருள் ஒழுங்கமைப்பை நிர்மாணித்ததன் பின்னர் நாளாந்தம் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுதலை சபையின் பதவியணியினருடன் இணைந்து மேற்கொள்ளுதல் இந்த விடயப் பரப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அந்த மென்பொருள் ஒழுங்கமைப்பு தொடர்பில் சபையின் பதவியணியினர், சேவை நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் போது அதன் அனைத்து செயற்பாடுகள் தொடர்பாக சபையின் பதவி அணியினருக்கு புரிதல் கிடைக்கும் என்பதனால் அவ்வாறு விடயப் பரப்பில் வரையறை செய்யப்பட்டிருந்தது.<br><br>அதற்கமைய அதற்கு உரியதான விலை மனு ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டது எனினும் அதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய சபையின் பதவியணியினர் இந்த நிறுவனத்தில் தற்போது இல்லை என்பதனால் ஆரம்பத்தில் குறித்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான மனித வளம் தீர்மானிக்கப்பட்டு அதற்கு பொருத்தமான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அதன் பின்னர் அந்த செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது.<br><br>அதனால் பெறுகைகள் முறைமைகள் மூலம் தெரிவு செய்யப்படும் நிறுவனத்தின் பதவியணியில் உள்ள பொறியியலாளர்கள் இருவரை 02 வருட காலத்திற்கு சேவை வழங்குதல் மற்றும் இரு வருடங்களின் பின்னர் 05 வருடங்கள் வரையான காலத்திற்கு தேவைப்பாட்டின் அடிப்படையில் சேவையினை நீடிக்கும் வசதியினை வழங்கி மென்பொருள் ஒழுங்கமைப்பைத் தாபிப்பதற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை மனு ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டிருந்தது.<br><br>தகவல் தொழில்நுட்ப பிரிவில் தற்போது உள்ள பதவியணியினர் நாளாந்தம் ஒரு சில செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இணைந்து செயல்படுகின்றனர் என்பதனால் அந்த பதவி அணியினரை முன்மொழியப்பட்ட லொத்தர் செயற்பாட்டு மென்பொருள் ஒழுங்கமைப்பில் கடமைகளுக்கு ஈடுபடுத்த முடியாது என்பதனால் இந்த புதிய தேவைப்பாட்டுக்கு அதற்கேற்ற புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளுக்கு அமைய (IT Assistant) இருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியுமானதாக உள்ளது என்பதனால் அவ்வாறான உத்தியோகத்தர்கள் இருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டில் திறந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் அதற்கு எதிர்பார்த்த தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட விண்ணப்பதாரர் காணப்படாததால் அந்த நடவடிக்கை வெற்றி அளிக்கவில்லை.<br><br>விசேடமாக தகவல் தொழில்நுட்ப சந்தையில் காணப்படும் உயர்ந்த சம்பள அளவின் காரணமாக அரச பிரிவுகளில் காணப்படும் சம்பள அளவிற்கு தகவல் தொழில்நுட்ப தொழில் வல்லுனர்களை கவருவதற்கு முடியாது உள்ளது.<br><br>இந்த நிலைமையில் சபையின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் பதவியணியினர் இன்றி மென்பொருள் ஒழுங்கமைப்பைத் தாபிக்கும் பணிக்கு குறித்த பெறுகைகள் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் பலனற்ற செயற்பாடு என்பதனால் அடிப்படை மற்றும் அத்தியாவசியமான அந்த மனித வள தேவைப்பாட்டினைத் தீர்மானித்ததன் பின்னர் இந்த மென்பொருள் ஒழுங்கமைப்பை தாபிக்கும் நடவடிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பது இனம் காணப்பட்டுள்ளது. |
| | விசேடமாக சபையில் நாளாந்தம் இடம்பெறும் லொத்தர் செயற்பாட்டு செயல்முறையின் போது சபையினால் அவ்வப்போது லொத்தர் சீட்டுக்களின் பரிசு முறையில் மாற்றி விசேட சீட்டிழுப்பை மேற்கொள்ளுவதற்கு நேரிட்டது என்பதனால், அதற்கு உரியதாக மென்பொருள் ஒழுங்கமைப்பை (Software Modification) செய்வதற்கு நாளாந்த செயற்பாட்டு நடைமுறையில் எழும் குறைபாடுகளை திருத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.<br><br>மென்பொருள் ஒழுங்கமைப்பைத் தாபிக்கப்பட்டு, அவற்றின் (Source Cord) சபைக்கு கிடைத்ததும் அதன் கட்டமைப்பு மாற்றங்கள் இலகுவில் ஏற்படுத்தக் கூடியதன்று. அதற்கமைய சபையின் பதவி அணியினருக்கு இந்த மென்பொருள் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு தொடர்பில் புரிந்துணர்வை பெற்றுக் கொள்வதற்கு நியாயமான காலம் தேவைப்படும். எனினும் நாளாந்தம் இடம்பெறும் லொத்தர் செயற்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகள் உருவாக்கப்பட வேண்டும். |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| | அதே போன்று 2023.02.14 ஆம் திகதி தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் அபிவிருத்தி லொத்தர் சபையின் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடம் மற்றும் புதிய தகவல் ஒழுங்கமைப்பை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது சபையில் காணப்படும் இந்த தேவைப்பாடு தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.<br><br>அந்தக் கலந்துரையாடலின் போதும் தற்போது சபையினால் விலை மனு ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட மொடல்களுக்கு மேலதிகமாக மூலதனம் குறையும் வகையில் மற்றும் சபையில் நிலையான தகவல் தொழில்நுட்ப மனித வளத்தினை ஆகக் குறைந்த வகையில் ஈடுபடுத்தும் வகையிலான மொடல் தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. அதேபோன்று அங்கு இருக்கும் தகவல் தொழில்நுட்ப தொழில் வல்லுனர்களுக்கு உயர் சம்பளம் காணப்படுகின்றதன் அடிப்படையில் சபையின் செயல்பாட்டு மொத்த செலவு அதிகரித்தல் தொடர்பில் அதாவது சிரமங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.<br><br>அந்த விடயம் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் மீண்டும் தெரிவித்ததுடன் பின்னர் நீண்ட ரீதியில் அந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட இந்த மென்பொருள் ஒழுங்கமைப்பின் தன்மைக்கு அமைய அடிப்படை மென்பொருள் ஒழுங்கமைப்பைத் தாபித்ததன் பின்னர் சபையினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் லொத்தர் விற்பனை மேம்பாட்டு வேலைத் திட்டங்களுக்கு உரிய மென்பொருள் புதுப்பித்தல் (Software Modification) மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. அவ்வாறான புதுப்பித்தல் (Software Modification) மேற்கொள்ளப்படும் போது அந்த மென்பொருளின் கட்டமைப்பை புதுப்பிக்கும் நடவடிக்கை என்பதனால் அவை வழங்குநர் நிறுவனத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த (Software Modification) நடவடிக்கை மேலதிக மொத்த செலவு மதிப்பீட்டிற்கு உரியதாக வழங்குநர் நிறுவனத்தினாலேயே நீண்ட காலத்திற்கு நிறைவேற்றிக் கொள்ளுதல் மற்றும் லொத்தர் செயல்பாட்டு நடவடிக்கைகளை நாளாந்தம் மேற்கொள்ளுதல் சபையின் பதவி அணியினர் மூலம் மேற்கொள்ளும் அடிப்படையில் இந்த செயற்பாட்டினை நிறைவேற்றுதல் சிறந்தது என இறுதியாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விடயப் பரப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் நிறுவனத்தில் சேவை வழங்கும் கடமையினைப் பேணிச் செல்லுவதற்காக வருடாந்த சேவை ஒப்பந்தமும் (Maintenance Agreement) மேற்கொள்ளுவது உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கு ஒத்ததாக மீண்டும் விலை மனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதுடன் இந்த அலுவலகத்திற்கு உரியதாக சபையின் மனிதவளத் தேவைப்பாடும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று முன்மொழியப்பட்ட மனித வளங்களுக்கான மொத்த செலவு கவனத்தில் கொள்ளப்பட்டு தற்போது அந்த சேவையினை தனியார் நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதனால் அதன் மொத்த செலவுடன் சபைக்கு அந்தப் புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்யும் போது ஏற்படும் மொத்த செலவுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய சபைக்கு அந்தப் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்து சேவையினைப் பெற்றுக்கொள்ளுதல் செலவின் அடிப்படையில் நன்மை பயக்கும் என்பது இனம் காணப்பட்டுள்ளது.<br><br>அதற்கு அமைய சபைக்கு புதிய லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான பதவியணியினரை இனம் கண்டு அந்த மனித வளத் தேவைப்பாட்டினை பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு முன் வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த பதவி அணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு மீண்டும் மேலதிக வேலைகளை முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியின் கீழ் மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.<br><br>இவ்வாறு தகவல் தொழில்நுட்பப் பதவி அணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு உரிய அடிப்படை அங்கீகாரத்தினை பெற்றதன் பின்னர் அபிவிருத்தி லொதத்ர் சபையின் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பை தாபிக்கும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| | மேலே கூறப்பட்ட நிலைமையின் கீழ் முன்மொழிக்கப்பட்ட லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பை தாபிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு இருக்காதுடன் அந்த சேவைகள் தற்போது சபைக்கு சேவை வழங்கும் (LMS Technologies PVT Limited) நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. |

# கணக்காய்வு அறிக்கை 2023 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| | எவ்வாறு இருப்பினும் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் ஒழுங்கமைப்பைத் தாபித்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல் அதற்குப் பொருத்தமான தகைமைகளைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப தொழில் வல்லுனர்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி என்பதனால் மேலே விவரிக்கப்பட்டுள்ள வகையில் அதற்குரிய மேலதிக வேலைகளை மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் மென்பொருள் வழங்கும் நிறுவனம் என்பவற்றுக்கிடையே 2009 ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மென்பொருள் சேவை வழங்கும் நிறுத்தினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான ஒழுங்கமைப்பைக் கணக்காய்வு செய்வதற்கு சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அது தொடர்பாக மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தற்போது LMS மூலம் பெற்றுக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வரும் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பிற்குப் பதிலாக புதிய தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பைப் பெற்றுக் கொள்வதற்குப் பெறுகைகள் முறைமை மூலம் தெரிவு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனால் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பு கணக்காய்விற்கு உட்படுத்த வேண்டிய பாரிய செலவு தொடர்பில் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (இ) பணிப்பாளர் சபையின் மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2021 கொண்ட செயற்பாட்டு பணி கோவையின் 3.2 (v) ஆம் பிரிவின் பிரகாரம் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு படிக் கொடுப்பனவு ஒழுங்குமுறை அன்றி அபிவிருத்தி லொத்தர் சபையினால் மீளாய்வாண்டினுள் மொத்தமாக ரூபா. 105,739,646 தொகை ஊக்குவிப்பு படியாக பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி லொத்தர் சபையின் பதவியணி அங்கத்தவர்களுக்கு ஊக்குவிப்புப் படி செலுத்துதல் சபையின் ஆரம்பம் தொட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஆரம்ப சந்தர்ப்பங்களில் இந்த ஊக்குவிப்பு படி சதவீதமாகச் செலுத்தும் முறைமை பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது செலுத்தப்படும் ஊக்குவிப்புப்படி சதவீதத்திற்கு விசேட அனுமதியினை நிதி அமைச்சிடமிருந்து 2016.04.17 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த அடிப்படை சதவீதத்தின் கீழ் ஊழியர் தொகுதிகளுக்கு இடையே ஊக்குவிப்பு படி சீராக்கல் செய்தல் எடையுடைய வீதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு அமைய செலுத்தப்பட்ட ஊக்குவிப்புப் படி ரூபா105,739,646 ஆகும். சபையினால் ஊக்குவிப்பு படி செலுத்தும் முறைமை உள்ளடக்கப்பட்ட புதிய முறை ஒன்று தயாரிக்கப்பட்டு 2024 மே 20 ஆம் திகதி இடம் பெற்ற 294 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காகப் பணிப்பாளர் சபை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் அதற்கான அரச வர்த்தக திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) மீளாய்வாண்டில் ரூபா.25,442,131,713 தொகையான லொத்தர் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் பின்னரான விற்பனை வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது ரூபா.6,370,674,962 இனால் அதாவது 33 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் கடந்த வருடத்தின் தேறிய இலாப சதவீதமான 17%, மீளாய்வாண்டில் 14% வரையில் குறைவடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது விநியோகித்தல் செலவு 49% இனால் மற்றும் நிர்வாக செலவுகள் 17% இனாலும் அதிகரித்திருந்தமை இதற்கு பிரதான ரீதியில் காரணமாக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது அந்த இரு செலவு வகையினதும் அதிகரிப்பு ரூபா.2,319,819,639 ஆகும். | 2022 ஆம் ஆண்டில் 8% மட்டத்தில் காணப்பட்ட ஏயுவு வரி வீதமானது 2023 ஆம் ஆண்டில் 18% வரையில் அதிகரித்தல் மற்றும் SSCL வரி காரணமாக நாட்டில் நிலவிய பொருளாதார நிலையற்ற தன்மை காரணமாக ஏற்பட்ட மூலப்பொருள் மற்றும் சேவைகளின் விலை அதிகரித்துச் சென்றமையின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் செலவு அதிகரிப்பு மற்றும் இலாபம் வீழ்ச்சி அடைதல் என்பன ஏற்பட்டுள்ளது. |
| (உ) பணிப்பாளர் சபையில் அனுமதியின் அடிப்படையில் அபிவிருத்தி லொத்தர் சபைக்கான தொழில் முயற்சிகள் வள திட்டமிடல் (ERP) செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக கணக்கீட்டு மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றைத் தாபிக்கும் பணி 2020 ஆம் ஆண்டு தொடக்கம் அனைத்து வருடத்திலும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுகைகள் நடவடிக்கை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிறுவனத்திற்கு ERP ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைய சபையின் முழு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் உரிய தேவைப்பாடுகளைத் தீர்மானித்து ஒவ்வொரு பிரிவு மட்டத்திலும் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு அதன் விடயப் பரப்பு உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த செயற்திட்டத்தின் முதலாவது கட்டமாக கணக்கீட்டு மென்பொருள் ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பணிகள் 2023 ஆம் ஆண்டில் ஆத்தர் சி. கிளார்க் மத்திய நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிறுவனம் பின்னர் அந்தப் பணியினை நிறைவேற்றுவதை மறுத்திருந்தது என்பதனால் இதற்கு மீண்டும் போட்டி விலை மனு கோரி பொருத்தமான வழங்குனரைத் தெரிவு செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. |

<table>
<tr><th colspan="2">கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள்</th><th>முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்</th></tr>
<tr><td>(ஊ)</td><td>சபையினால் வோக்ஷோல் வீதியில் 234 ஆம் இலக்க கட்டடத்தை 2006 ஒக்டோபர் மாதம் தொடக்கம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமாக மீறப்பட்டிருந்த காரணத்தால் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 723,780 தொகை மற்றும் அந்த வருடத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்த வாடகை தொகையின் ஒரு பகுதியான ரூபா. 4,976,220 ஆகிய தொகைகளின் மொத்தமான ரூபா. 5,700,000 தொகையினை தற்போது 17 வருடங்களில் முற்றாக அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.</td><td>வோக்ஷோல் வீதியில் 234 ஆம் இலக்க கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு உரியதாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா.5,700,000 தொகையினை அறவிடுதல் தொடர்பில் நிதி அமைச்சில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்குரிய அனைத்து தகவல்களும் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. உரிய தகவல்கள் கிடைத்துள்ளது என்பதனை சட்டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. எனினும் இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கவில்லை என்பதனால் 2023.07.24 ஆம் திகதியிடப்பட்டு மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>(எ)</td><td>1990 ஆம் ஆண்டில் வோட் பிரதேசத்தில் நபர் ஒருவருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூபா. 2,520,000 தொகையான கட்டட வாடகை வைப்பு தொகையினை அறவிட்டுத் தருமாறு கோரி 23 வருடங்களுக்கு முன்னர் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு 2016 ஜனவரி 11 ஆம் திகதி கிடைத்திருந்தது. குறித்த தொகையினை அறவிட்டுக் கொள்ளுமாறு வழக்கு தீர்ப்பு வெளியிடப்பட்டு 07 வருட காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தத் தொகையினை அறவிடுவதற்கு சபை தவறி இருந்தது.</td><td>திரு. எம்.ஏ.எம். அமீன் அவர்களிடமிருந்து இந்தத் தொகையினை அறவிடுவதற்கான நீதிமன்ற நடைமுறை இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது என அரச சட்டத்தரணியினால் 2023.10.25 ஆம் திகதி எழுத்து மூலமாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>(ஏ)</td><td>2023 திசெம்பர் 31 ஆம் திகதி வியாபார கடன்பட்டோர் ரூபா. 414,095,595 மீதி காணப்பட்டதுடன் அதில் 1 வருடத்திற்கும் 2 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் காணப்பட்ட ரூபா.207,860 மீதியும், 3 வருடத்தினை கடந்த ரூபா.2,800,000 மீதியும் அடங்கும். மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அந்த கடன் மீதியினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.</td><td>2023 திசம்பர் 31ஆம் திகதியில் திரண்ட செலவு கணக்கில் 1 வருடத்திற்கும் 2 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் காணப்படும் ரூபா. 207,860 மீதியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள செலவுகளில் இருந்து உருவானதாகும்.
<table>
<tr><td>சரத் ஜயதிலக</td><td>பொறியியல் தொழில் கட்டணம்</td><td>ரூபா.45,000</td></tr>
<tr><td>மாஸ்டர் தடகள இலங்கை</td><td>தடகள சாம்பியன்ஷிப்பிற்கான அனுசரணை</td><td>ரூபா.60,000</td></tr>
<tr><td>தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் நலன்புரி சங்கம்</td><td>கிரிக்கெட் போட்டிக்கான அனுசரணையாளர்</td><td>ரூபா.20,000</td></tr>
<tr><td>பாராளுமன்ற சேவை உதவியாளர் நட்புறவு சங்கம்</td><td>வருடாந்த கூட்டத்திற்கான அனுசரணையாளர்</td><td>ரூபா.50,000</td></tr>
<tr><td>ஏ.கே.கே. இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட்</td><td>நிறுவனத்தின் கட்டட புனரமைப்பிற்கான கொடுப்பனவின் தடுத்து வைக்கப்பட்ட தொகை</td><td>ரூபா.32,860</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>ரூபா.207,860</td></tr>
</table>
இந்த மீதிகளை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதால் 2023 ஆம் ஆண்டு இறுதி கணக்குகளில் வியாபாரக் கடன் கொடுத்தோர் கணக்குகளின் மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>3 வருடங்களைக் கடந்த ரூபா. 2,800,000 தொகையான மீதியானது அபிவிருத்தி லொத்தர் சபையின் செயற்படும் முறைமையினை தயாரித்தல் தொடர்பில் திரு. ரஞ்சித் தேனுவர அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையாகும். இந்த பணியில் தேவையான திருத்தங்களைப் பூர்த்தி செய்து இருக்காததால் இதுவரையில் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.</td></tr>
</table>

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (ஐ) தற்போது உலகில் காணப்படும் தொழில்நுட்ப போக்கு மற்றும் லொத்தர் சந்தையில் காணப்படும் போட்டித் தன்மை என்பவற்றை கருத்தில் கொண்டு லொத்தர் விற்பனையை டிஜிட்டல் ஊடகத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளுவதற்கு டிஜிட்டல் உள்ளீடு ஒன்றை DLB Sweep எனும் பெயரில் ஆரம்பித்து SMS ஊடகம் ஊடாக நு லொத்தர் விற்பனை செய்தல், விற்பனை மேம்பாடு உள்ளிட்ட பணிகளுக்காக 2023 ஆம் ஆண்டில் வரவு செலவு மூலம் ரூபா.57,625,000 தொகையினை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் E லொத்தர் விற்பனை மேம்பாட்டு பணிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா.1,643,873 தொகை மட்டுமாக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 3% மட்டுமேயான மிகக் குறைந்து சதவீதமாகும். | இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனைகளின் அடிப்படையில் இந்த உள்ளீடு உருவாக்கப்பட்டது என்பதனால் இந்த உள்ளீட்டின் உள்ளடக்கத்தில் ஒரு சில நடைமுறை சிக்கல்களுக்கு நுகர்வோருக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்த காரணத்தால் இந்த உள்ளீட்டின் ஊடாக விற்பனையை மேற்கொள்ளுவதில் சிக்கல்கள் காணப்பட்டன. அதற்கு அமைய இந்த உள்ளீட்டினை மேம்படுத்துவதற்கு அந்தத் தடைகளை சரி செய்து பின்னர் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 2022 செப்டம்பர் 28 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 2022/09/2015 கொண்ட பத்திரத்தின் மூலம் பணிப்பாளர் சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதனால் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |

# விரிவான வருமானக் கூற்றின் கணக்கு விபரம்

| டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|---|
| வருவாய் | 01 | 25,442,131,713 | 19,071,456,751 |
| லொத்தர் சீட்டுகளுக்கான கிரயம் | 02 | 1,147,660,028 | 844,240,759 |
| பரிசுகளுக்கான செலவினம் | 03 | 13,450,963,612 | 9,884,078,986 |
| சீட்டிழுப்பு கிரயம் | 04 | 826,071,896 | 751,141,022 |
| மொத்த இலாபம் | | 10,017,436,178 | 7,591,995,984 |
| ஏனைய வருமானம் | 05 | 434,981,322 | 320,846,644 |
| விநியோக கிரயம் | 06 | 6,704,738,408 | 4,487,324,271 |
| நிர்வாக செலவுகள் | 07 | 707,503,423 | 605,097,921 |
| தொழிற்படுத்தல் செலவுகளுக்கு பினனரான மிகை | | 3,040,175,668 | 2,820,420,437 |
| நிதிக் கிரயம் | 08 | 663,431 | 979,196 |
| பரிசுகளை செலுத்தித் தீர்த்தல் | | 476,784,240 | 447,150,260 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 3,516,296,477 | 3,266,591,501 |
| வருமான வரி | 09 | (106,210,247) | 55,904,459 |
| வருமான வரிக்கு பின்னரான இலாபம் | 10 | 3,622,506,725 | 3,210,687,041 |
| பிற விரிவான வருமானம் | | | |
| ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/ நட்டம் | 17.1 | (5,576,996) | 9,112,463 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 1,648,326,333 | 5,853,857 |
| ஆண்டுகான மொத்த விரிவான வருமானம் | | 5,265,256,062 | 3,225,653,361 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

**டப்ளிவ் ஏ வி சி சோமரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

**அஜித் குணரத்ன நாரகல**
தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

**ஜெனட் ஜயவர்தன**
பணிப்பாளர்

# நிதி நிலைக்கூற்று

| ரூபா டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 11 | | |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் | | 2,703,367,049 | 1,082,575,630 |
| நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள் | | 8,550,596 | 3,228,884 |
| அருவச் சொத்துக்கள் | 11 | 6,130,310 | 9,488,402 |
| **மொத்த நடைமுறையல்லாச சொத்துக்கள்** | | 2,718,047,956 | 1,095,292,917 |
| | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பதிவேடுகள் | 13 | 56,720,455 | 45,970,611 |
| வணிக கடன்பெற்றோர் மற்றும் பிற வருமதிகள் | 14 | 207,964,715 | 163,480,972 |
| முற்கொடுப்பனவு மற்றும் வைப்புகள் | 15 | 4,748,286 | 6,223,428 |
| நிலையான வைப்புகள் | 12 | 1,710,213,172 | 1,742,324,887 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 16 | 767,981,019 | 557,240,367 |
| மொத்த நடைமுறை சொத்துக்கள் | | 2,747,627,647 | 2,515,240,265 |
| **மொத்த சொத்துக்கள்** | | 5,465,675,603 | 3,610,533,182 |
| | | | |
| **உரிமைபபங்குகள் மற்றும் பொறுப்புகள்** | | | |
| **பங்களிப்பு மூலதனம்** | | | |
| சனாதிபதி நிதியம் | | 2,200,000 | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம் | | 2,200,000 | 2,200,000 |
| கணக்கிலுள்ள பரிசுக்கான ஒதுக்கம் | | 139,106,256 | 725,956,289 |
| செலுத்தப்படவேண்டிய சனாதிபதி நிதியம் | | 682,730,725 | 315,791,041 |
| மீள்மதிப்பீடு மிகை | | 2,268,909,427 | 620,583,095 |
| ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/ நட்டம | | 6,259,359 | 11,836,354 |
| **மொத்த உரிமைப் பங்கு** | | 3,101,405,767 | 1,678,566,779 |
| | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் நலன்சார் பொறுப்புகள் | 17 | 9,081,293 | (4,438,730) |
| செலுத்தப்பட வேண்டிய முகவர் மற்றும் விநியோகத்தர் வைப்புகள் | 18 | 39,875,881 | 38,718,881 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுபபுகள்** | | 48,957,174 | 34,280,151 |
| | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வணிக மற்றும் ஏனைய சென்மதிகள் | 19 | 690,726,582 | 771,026,177 |
| சென்மதியான பரிசுகள் | 20 | 1,456,785,350 | 1,003,306,515 |
| சென்மதியான கடன் வவுச்சார்கள் | | 167,800,730 | 123,353,560 |
| **மொதத நடைமுறை பொறுப்புகள்** | | 2,315,312,663 | 1,897,686,252 |
| **மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்** | | 5,465,675,603 | 3,610,533,182 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

**டப்ளிவ் ஏ வி சி சோமரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

**அஜித் குணரத்ன நாரகல**
தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

**ஜெனட் ஜயவர்தன**
பணிப்பாளர்

# காசுப் பாய்வுக் கூற்று

| டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2023 | 2022 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூ. | ரூ. |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து விளைந்த காசுப் பாய்வு** | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | | 3,516,296,477 | 3,266,591,501 |
| **சீராக்கங்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம | | 79,161,279 | 76,864,509 |
| பரிசு ஒதுக்கக் கணக்கு | | (586,850,033) | 277,824,641 |
| பணிகொடைக்கான ஒதுக்கம் | | 8,722,804 | 9,482,677 |
| பணிகொடைக்கான கொடுப்பனவு | | (6,884,568) | (1,330,145) |
| வட்டி வருமானம் | | (399,449,492) | (276,451,109) |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மூலம் இலாபம் | | (354,582) | (485,143) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (106,187,260) | |
| சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தியது | | (3,255,567,041) | (3,459,115,473) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படுத்தல் இலாபம்** | | (751,112,417) | (106,618,541) |
| **தொழிற்பாட்டு சொத்துக்களின் அதிகரிப்பு /குறைவு** | | | |
| பதிவேடுகளில் அதிகரிப்பு/குறைவு | | (10,749,844) | (2,868,343) |
| கடன்பெறுனர்களின் அதிகரிப்பு/குறைவு | | (57,711,291) | (8,696,537) |
| வைப்பு மற்றும் முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/குறைவு | | 1,475,142 | 4,918,515 |
| **தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு/குறைவு** | | | |
| கடன் தருநர்களின் அதிகரிப்பு/குறைவு | | 124,681,357 | 74,565,122 |
| சென்மதியான பரிசுகளின் அதிகரிப்பு/குறைவு | | 453,478,836 | 40,513,411 |
| கடன் வவுச்சர்களின் அதிகரிப்பு/குறைவு | | 44,447,170 | (6,914,700) |
| **தொழிற்பாட்டு செற்பாடுகளின் நிகர காசுப் பாய்வு** | | (195,491,046) | (5,101,074) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு** | | | |
| பணியாளர்களுக்கான கடன் - பெற்றவை | | 21,169,588 | 22,222,066 |
| பணியாளர்களுக்கான கடன் - செலுத்தப்பட்டவை | | (7,288,747) | (26,564,736) |
| நிலையான சொததுக்களின் அகற்றல் (ஆதனங்கள், இயந்திர சாதனங்ள் மற்றும் உபகரணங்கள்) | | (46,909,193) | (7,942,228) |
| விற்பனை செய்யப்பட்ட நிரந்தர சொத்துக்கள் | | 437,053 | 649,759 |
| வட்டி வருமானம் | | 399,449,492 | 276,451,109 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | 38,216,505 | (603,534,878) |
| முகவர் விநியோக வைப்புகளின் அதிகரிப்பு | | 1,157,000 | 1,054,000 |
| **முதலீட்டு செயற்பாடுகளினால் விளைந்த தேறிய காசு** | | 406,231,698 | (337,664,908) |
| | | 210,740,651 | (342,765,983) |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய காசு அதிகரிப்பு/குறைவு | | 210,740,651 | (342,765,983) |
| ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | 557,240,367 | 900,006,350 |
| ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 16 | 767,981,019 | 557,240,367 |
| வங்கிலுள்ள காசு — இலங்கை வங்க | | 342,627,989 | 264,588,741 |
| மக்கள் வங்கி | | 424,314,375 | 288,958,323 |
| சம்பத் வங்கி | | | 3,139,750 |
| ஹற்றன் நசனல் வங்கி | | 1,029,250 | 544,150 |
| கையிலுள்ள காசு | | 9,404 | 9,404 |
| | | 767,981,019 | 557,240,367 |

# உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று

| | சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நிதியம் | பரிசு ஒதுக்கக் கணக்கு | தக்க வைக்கப்பட்ட வருவாய் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2022.01.01 இல் உள்ளவாறு மீதி | 4,400,000 | 448,131,648 | 564,219,474 | 614,729,237 | 2,723,892 | 1,634,204,250 |
| 2022 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவை | | 277,824,641 | 3,210,687,041 | 5,853,857 | 9,112,463 | 3,503,478,003 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | | | | |
| சனாதிபதி நிதியத்திற்கான ஒதுக்கீடு - 2022 | | | (3,459,115,473) | | | (3,459,115,473) |
| 2022.12.31 இல் உள்ளவாறு மீதி | 4,400,000 | 725,956,289 | 315,791,041 | 620,583,095 | 11,836,354 | 1,678,566,779 |
| 2023 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவை | | (586,850,033) | 3,622,506,725 | 1,648,326,333 | (5,576,996) | 4,678,406,029 |
| சனாதிபதி நிதியத்திற்கான ஒதுக்கீடு | | | (3,255,567,041) | | | (3,255,567,041) |
| 2023.12.31 இல் உள்ளவாறு மீதி | 4,400,000 | 139,106,255 | 682,730,725 | 2,268,909,427 | 6,259,359 | 3,101,405,767 |

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. அறிக்கையிடும் நிறுவனம்

அபிவிருத்தி லொத்தர் சபை 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. சபையின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகத்தின் முகவரி இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஆகும். இவ்வருடத்தில் சபையின் முதன்மையான பணி லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்வதாகும்.

## 2. தயாரிப்பதன் அடிப்படை

### 2.1. இணக்க கூற்று

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள, இதனகத்துப் பின்னர் புள்ளி விபரங்கள் என அழைக்கப்படும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை அரச நிதி ஒழுங்குவிதிகளிலும் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளும் குறித்துரைக்கப்படுகின்ற நியமங்களுக்கு அமைவாக இந்நிதி கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது..

### 2.2. அளவீட்டின் அடிப்படை

பின்வருமாறு காட்டப்பட்டுள்ள முறைகள் தவிர்ந்ததாக இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. நிலையான வைப்பீடு மீதான முதலீடு (நியாய பெருமதியின் அடிப்படையில்) காணிகள் மற்றும் கட்டிடங்கள் (மீள் கணிப்பீட்டு பெறுமானத்தின் அடிப்படையில்) பணிக்கொடைகளுக்கான ஒதுக்கம் (பணிக்கொடை களுக்கான சூத்திரம் மற்றும் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நடப்பு பெறுமதியின் அடிப்படையில்)

### 2.3. நடைமுறை சார்ந்த மற்றும் சமர்ப்பண செலாவணி

நிதிக்கூற்றுக்கள் சபையின் நடைமுறை சார்ந்த இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது. இலங்கை ரூபாய்கள் வடிவத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து நிதி தகவல்களும் அண்மித்த ரூபாய் பெறுமானத்தில் மட்டமாக்கப்பட்டுள்ளது.

### 2.4. வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட திகதி

2022 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடுவதற்கு 2023 பெப்ரவரி 23ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.5. மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளை ஈடுபடுத்துதல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக முகாமைத்துவம் கணக்கிட்டு கொள்கைகளை நடைமுறை படுத்துதல் மற்றும் அறிக்கை இடப்படுகின்ற சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் செலவுகளின் அளவுகளுக்கு தாக்கம் விளைவிக்கின்ற தீர்ப்புகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் வரலாற்று அனுபவங்கள் மற்றும் நிலவுகின்ற சூழ்நிலைகள் ஆகியவற்றின் கீழ் நியாயமானதென கருதப்படுகின்ற எதிர்பார்ப்புகளும் உள்ளிட்ட ஏனைய காரணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். ஆகவே உண்மையான பெறுபேறுகள் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளையும் விட மாற்றம் அடையலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள ஊகங்கள் இடையறாத அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலத்தில் அது தாக்கம் விளைவிக்கின்ற எந்த ஒரு எதிர்கால காலத்திற்குமான கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அடையாளம் காணப்படும்.

### 2.6. ஏதுவான தன்மை மற்றும் போதுமான தன்மை

நிதி கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இல.01 இற்கு இசைந்தொழுகும் அனைத்து சமமான உருப்படிகளும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். தன்மை அல்லது செயற்பாட்டில் சமமற்ற உருப்படிகளும் பொருட்களாயின் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். இனங்காணப்பட்ட அளவுகளை எதிரீடு செய்வதற்கு சட்டபூர்வமாக எதிர்வீடு செய்வதற்கு உண்மையுள்ள போதும் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே தடவையில் சொத்துக்களை காசுருவாக்கி பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு நோக்கம் கொண்டுள்ள போது மாத்திரம் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களை எதிரீடு செய்து தேறிய பெறுமானம் நிதிநிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும். ஏதேனும் கணக்கிட்டு கொள்கையொன்றின் அல்லது பொருள்கோடல் ஊடாக வரையறுக்கப்பட்டு அல்லது அனுமதி அளிக்கப்பட்டு இருக்குமாயின் தவிர அத்துடன் கணக்கிட்டு கொள்கைகளில் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவுகள் விரிவான நிதி கூற்றுக்களில் எதிரீடு செய்யப்படாது.

### 2.7. வருமான வரி

சபையானது வருமான வரிகள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட வரி, SSCL மற்றும் நிறுத்தி வைக்கும் வரி உள்ளிட்ட பிற வரிகளுக்கு உட்பட்டது. நிதிநிலை அறிக்கைகளில் SLFRS ஐ ஏற்றுக்கொள்வதற்கான வரி வழிகாட்டுதல்கள் மற்றும் வரிகளை விதிக்கும் நோக்கத்திற்காக வரி விதிக்கக்கூடிய இலாபம் ஆகியவை நிலுவையில் உள்ள தற்போதைய மற்றும் பிற வரிகளுக்கான மொத்த ஒதுக்கீட்டைத் தீர்மானிக்க குறிப்பிடத்தக்க தீர்ப்பு தேவைப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் நேரத்தில், வரிச் சட்டங்களின் பொருந்தக்கூடிய தன்மையின் விளக்கம் தொடர்பாக நிச்சயமற்ற நிலைகள் உள்ளன. டிசம்பர் 31, 2023 நிலவரப்படி, உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தில் மூன்று நிலுவையில் உள்ள வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி மதிப்பீடுகள் உள்ளன. சபையானது மேல்முறையீடு செய்து எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மேற்படி மதிப்பீடுகளால் பெரிய பொறுப்பு எதுவும் ஏற்படாது என்பது கருத்து சபைக்கு உள்ளது

மதிப்பீட்டு எண் தொடர்பாக உள்நாட்டு வருவாய் திணைக்களத்துடன் (IRD) சமீபத்திய வரி மதிப்பீடு. 0201617002 மற்றும் வழக்கு எண் TAC/IT/065/2021 வெற்றிகரமாக தீர்க்கப்பட்டது. அபிவிருத்தி லொத்தர் மற்றும் IRD ஆகியவை பரஸ்பரம் உடன்படும் தீர்வை எட்டியது, மேலும் தீர்வை இறுதி செய்ய 23.01.2024 அன்று வரி மேல்முறையீட்டு ஆணையத்தால் இறுதித் தீர்மானம் வெளியிடப்பட்டது, சபைக்கு ஒரு முறை ரூ. 44,463,941.00 செலுத்த வேண்டி ஏற்பட்டது. மேலும் இந்த வழக்கு தொடர்பாக கூடுதல் பொறுப்புகள் எதுவும் இல்லை.

### 2.8. இடையறாத்தன்மை

எதிர்வரும் காலத்தில் வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சபைக்கு சொந்தமாக சொத்துக்கள் உள்ளதென்பதைப் பற்றி சபை திருப்தி அடைதல் வேண்டும். மேலும் நடப்பிலுள்ள தொழில் முயற்சியாக கம்பனி தொடர்ந்து இயங்குவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பாக கணிசமான

# கணக்கீட்டு கொள்கைகள்



அளவு ஐயம் ஏற்படக்கூடிய பொருண்மையில் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக சபை எதையும் அறியவில்லை என்பதுடன் சபையினை கலைப்பதற்கு அல்லது அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அப்பிப்பிராயம் கொள்ளவில்லை. ஆகவே, சபையின் நிதி கூற்றுக்களை தயாரித்தல் இடையறா தன்மையை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

## 3. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

### 3.1. ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்

#### 3.1.1. இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவை சேவைகளை வழங்குவதற்காக அல்லது நிர்வாக பணிகளுக்காக வைக்கப்பட்டுள்ள தொட்டு உணரக் கூடிய பொருட்களாக இருப்பதுடன் அவை ஒரு காலகட்டத்திற்கு மேற்பட்ட தடவைகள் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அ. இனங்காணுதல்

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நலன்கள் சபைக்கு வந்து சேரும் ஆற்றல் உள்ளதாயின் அத்துடன் சொத்தின் கிரயம் நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் இனம் காணப்படும்.

ஆ. ஆதனம், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் எஞ்சிய மதிப்புகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் சொத்துக்களின் தேய்மான முறைகளை நிறுவனம் மதிப்பாய்வு செய்கிறது. இந்த மதிப்புகள், விகிதங்கள், முறைகள் ஆகியவற்றின் மதிப்பீட்டில் நிர்வாகத்தின் தீர்ப்பு செயல்படுத்தப்படுகிறது, எனவே அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை. சபை 2023 இல் சொத்துக்களின் விரிவான மதிப்பாய்வு மற்றும் மறுமதிப்பீட்டை நடத்தியது

இ. அளவிடுதல்

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் ஒட்டுமொத்த பெறுமானத் தேய்வினை கழித்த பின்னர் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமானத்திற்கு குறிப்பிடப்படும்.

சொத்துக்களை கொள்வதற்கு நேரடியாகவே ஏதுவானதாக அமையும் செலவுகள் கிரயம் என்பதில் உள்ளடங்குகின்றது. சுயமாக கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்களின் கிரயத்திற்கு அவற்றை கட்டியெழுப்புவதற்கு அத்தகைய சொத்து அதன் எதிர்பார்க்கப்பட்ட பாவனைக்காக செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகவே ஏதுவாக்கிக் கொள்ளக் கூடிய ஏனைய செலவுகள் மற்றும் பொருட்களை பகுதிகளாக கழற்றி அகற்றி அவை அமைந்திருந்த தளத்தில் மீள பொருத்துவதற்கு ஏதுவான செலவுகளும் இதில் உள்ளடக்குகின்றது. சொத்துக்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்களை மீள அமைத்துக் கொள்வதற்கு அல்லது பேணி வருவதற்கு ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களை பழுது பார்த்தல் அல்லது பேணி வருவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகளும் அவ்வாறு செலவு செய்யப்பட்ட பின்னர் செலவாக இனங்காணப்பட்டுள்ளது.

ஈ. பிற்காலத்து செலவுகள்

நீண்ட சோதனைகள் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் உள்ளிட்டதாக தனித்தனியாக கணக்கு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் உருப்படி ஒன்றை மீளமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் செலவு மூலதனமாக்கப்படுகின்றது. ஏதேனும், ஆதனம், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உருப்படியொன்றின் ஒரு பகுதியின் எதிர்கால பொருளாதார நலன் சபைக்கு வந்து சேர்வதற்கான வாய்ப்பு உள்ளதாயின் அத்தகைய கிரயத்தை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அத்தகைய உருப்படியை மீளமைப்பதற்கான கிரயம் உருப்படியின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமானத்தில் இனங்காணப்பட்டுள்ளது. மீளமைக்கப்பட்ட பகுதியின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமானம் அகற்றப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் அன்றாட சேவை கிரயங்கள் உறப்பட்ட கிரயமாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது..

உ. பெறுமான தேய்வு

சாதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் அனைத்து பகுதிகளும் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட் காலம் மீது தேய்வுபெறுமானத்திற்கு உட்படுத்துதல் நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனம் காணப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு..

| | |
|---|---|
| கட்டிடங்கள் / கூடங்கள் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் | 25% |
| அலுவலக உபகரணங்கள் | 25% |
| இயந்திர உபகரணங்கள் | 12.50% |
| மோட்டார் வாகனங்கள்/ முச்சக்கர வண்டிகள் | 20% |
| கணினிகள் மற்றும் பாகங்கள் | 33.33% |
| வர்த்தக சின்னம் கொண்ட விற்பனைக் கூடங்கள் | 16.66% |
| மோட்டார் சைக்கிள்கள் | 25% |
| உள்ளீடு மென்பாகங்கள் | 33.33% |
| செல்லிடத் தொலைபேசிகள் | 50% |

ஒரு சொத்தை பயன்படுத்தக் கூடியவாறு சபைக்கு சொந்தமாக இருக்கும் திகதி முதல் அத்தகைய சொத்தை அகற்றும் திகதிவரை அல்லது அத்தகைய சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் சபை அச்சொத்தினை பெறுமான தேய்வுக்கு உட்படுத்துகின்றது

ஏதேனும் தொட்டு உணரக்கூடிய சொத்தாக ஏதுவாக்கிக்கொள்ளக்கூடிய அத்துடன் எதிர்கால பொருளாதார நலன் சபைக்கு கிடைக்கக்கூடிய தாயின் அத்தகைய சொத்தின் ஏதேனும் தொட்டு உணரக்கூடிய சொத்தாக ஏதுவாக்கிக்கொள்ளக்கூடிய அத்துடன் எதிர்கால பொருளாதார நலன் சபைக்கு கிடைக்கக்கூடிய தாயின் அத்தகைய சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் அத்தகைய தொட்டு உணரக்கூடிய சொத்தாக அச்சொத்து அடையாளம் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட கணனி வன்பாகத்திற்கு அத்தியாவசியமாக தொடர்பு பட்டதாக அமையாத தெளிவாக இனம் காணக்கூடிய நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய மற்றும் எதிர்கால பொருளாதார நலன்களை பெற்றுத் தருவதற்கு காரணமாக அமையக்கூடிய சபையினால் பயன்படுத்தப்படுவதற்கு அதிகாரம் உடைய அனைத்து கணனி மென்பாகங்களினதும் கிரயங்கள் ஐந்தொகையில் தொட்டு உணரக்கூடிய சொத்துக்கள் எனும் வகுதியின் கீழ் உள்ளடக்கி திரண்ட

கடன் தீர் சொத்து மாற்றம் மற்றும் சேத இழப்புக்கான கிரயத்திற்கு முன் கொண்டு செல்லப்படுகின்றது.

ஊ. PPE இன் அங்கீகாரம் நீக்கப்பட்டது

PPE அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது PPE அங்கீகரிக்கப்படாமல் இருக்க வேண்டும் (PPE இருந்து அகற்றப்பட வேண்டும்). அப்புறப்படுத்துதலின் மீதான ஆதாயம் அல்லது நஷ்டம், அப்புறப்படுத்தப்பட்ட வருமானத்திற்கும், அப்புறப்படுத்தப்பட்ட தேதியில் சொத்தை எடுத்துச் செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாக அங்கீகரிக்கப்படுகிறது. இந்த ஆதாயம் அல்லது இழப்பு இலாப நட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. அகற்றல் வருமானம் வருவாயாக அங்கீகரிக்கப்படக்கூடாது.

## 3.2. பண்டங்களின் கையிருப்பு

பண்டங்களின் கையிருப்புகளின் கிரயத்திற்கு மேற்படி இருப்புகளை கொள்வதற்காக உறப்பட்ட செலவினங்களும் அவை இருக்கும் இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதற்கு உறப்பட்ட ஏனைய செலவுகளும் உள்ளடங்கும். இதற்கமைவாக பண்டங்களின் கையிருப்பு களின் கிரயம் பின்வருமாறு கணிப்பிட படுகின்றது.

| | |
|---|---|
| ராசி அதிர்ஷ்டம் | உண்மை கிரயத்தில் |
| சனிதா வாசனா | உண்மை கிரயத்தில் |
| ஜயோதா | உண்மை கிரயத்தில் |
